# மாதிரித்தேர்வு 2 – பொதுத்தமிழ்

1. "பத்துவகையால் பயன்தெரி புலவர்
   இத்திறம் படரார் படர்குவர் ஆயின்"
   தெரிபுலவர் என்பதன் இலக்கணக் குறிப்பு
   A. வினையெச்சம் B. வினைத் தொகை
   C. வினையாலணையும் பெயர் D. பண்புத் தொகை

2. பகுபதத்தை எத்தனை உறுப்புகளாக பிரிக்க முடியும்?
   A. 2 – 6 B. 2 – 7 C. 2 – 8 D. 1 - 6

3. பொருத்துக.
   a. ஒற்றளபெடை 1. பெயர்ச்சொல் அளபெடுக்கம்
   b. செய்யுளிசை அளபெடை 2. மூவசைச் சீர்
   c. இன்னிசை அளபெடை 3. ர், ழ்
   d. சொல்லிசை அளபெடை 4. ஈரசைச் சீர்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A | 3 | 4 | 1 | 2 |
| B | 1 | 2 | 3 | 4 |
| C | 3 | 4 | 2 | 1 |
| D | 3 | 1 | 2 | 4 |

4. கீழ்க்கண்டவற்றுள் சரியானவற்றை தேர்வு செய்க.
   வினையாலணையும் பெயர்க்கான இலக்கணம்
   1. மூவிடங்களிலும் வரும் 2. காலம் காட்டாது
   3. முக்காலத்தையும் காட்டும் 4. தொழில் செய்பவர்க்கு பெயராய் வரும்
   A. 1, 2, 3, 4 சரி B. 1, 2, 3 சரி
   C. 1, 3, 4 சரி D. 1, 2, 4 சரி

 PH: 24339436, 42867555, 9840226187

5. பொருத்துக.

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| a. தண்கடல் | 1. பண்புத் தொகை |
| b. பாயுநாள் | 2. வினைத் தொகை |
| c. பகர்வார் | 3. வினையாலணையும் பெயர் |
| d. வாட்படை | 4. இரு பெயரொட்டு பண்புத்தொகை |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A | 2 | 1 | 3 | 4 |
| B | 2 | 4 | 3 | 1 |
| C | 1 | 2 | 3 | 4 |
| D | 4 | 3 | 2 | 1 |

6. கீழ்க்கண்டவற்றுள் 'மலை' என்பதன் பொருள் அல்லாதது எது?
A. மாதிரம் B. பூதரம் C. குன்றம் D. புளகிதம்

7. ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்
மாற்றாரை மாற்றும் படை – செய்யுள் கூறும் பொருள் யாது?
1. தோல்வியை ஒப்பு கொள்ளல்
2. தீங்கு இழைத்தவர்க்கு நன்மை செய்தல்
3. ஒரு செயலை செய்பவர்க்கு வலிமை தருவது பணிவுடன் நடத்தல்
4. தீங்கு இழைத்தவரிடம் போர் தொடுப்பது
A. 2 சரி B. 3 சரி C. 1, 2 சரி D. 2, 4 சரி

8. 'விண்டல்' என்பதன் பொருள்
A. மூங்கில் B. மழைத்துளி C. வானம் D. மேகம்

9. 'மதோன்மத்தர்' என்பவர் யார்?
A. சிவபெருமான் B. முருகன் C. அனுமன் D. கிருஷ்ணர்

10. "தளை" என்பதன் பொருள் யாது?
A. காலம் B. விலங்கு C. உறவு D. குழந்தை

11. "சேதாம்பல்" = செம்மை + ஆம்பல் - புணர்ச்சி விதி
1. ஈறுபோதல் விதிப்படி மை கெடவில்லை
2. முன்னின்ற மெய் திரிதல் விதி
3. இனமிகல் விதி
4. நிலைமொழி ஈறுகெட்டி ஆதிநீடல்
A. 1, 2 சரி B. 1, 3 சரி C. 2 மட்டும் சரி D. 1, 4 சரி

12. "பொழிப்பு" எதுகை தொடையின் விதி
1. 1, 3-ம் சீரின் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது
2. 1, 2-ம் சீரின் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது
3. 1, 3-ம் சீரின் முதல் எழுத்து ஒன்றி வருவது
4. 1, 4-ம் சீரின் முதல் எழுத்து ஒன்றி வருவது
A. 1 மட்டும் சரி B. 2 மட்டும் சரி C. 3 மட்டும் சரி D. 4 மட்டும் சரி

13. சந்திப் பிழையற்ற தொடரைத் தேர்ந்தெடு.

1. விளித்தொடரை அடுத்து வரும் வல்லினம் மிகாது
2. எழுவாய்த் தொடரில் வரும் வல்லினம் மிகும்
3. இரட்டைக் கிளவியில் வல்லினம் மிகாது
4. ஓரெழுத்து ஒரு மொழியில் வரும் க், ச், த், ப் மிகும்

A. 1, 3, 4 சரி B. 1, 2, 3 சரி C. 2, 3, 4 சரி D. 1, 4, 2 சரி

14. அகர வரிசையில் எழுது.

A. அறிவு, ஆண்மை, ஆற்றல், இயல்பு B. ஆண்மை, அறிவு, ஆற்றல், இயல்பு
C. அறிவு, ஆற்றல், ஆண்மை, இயல்பு D. ஆண்மை, ஆற்றல், அறிவு, இயல்பு

15. Candid - என்பதன் தமிழாக்கம் அறிக.

A. கபடமற்ற B. அடக்கமான C. உயர்வான D. அமைதியான

16. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குக.

1. இன்மை ஒருவற்கு இளிவன்று சால்பென்னும்
2. இன்மை இளிவன்று ஒருவற்கு சால்பென்னும்
3. இளிவன்று இன்மை ஒருவற்கு சால்பென்னும்
4. இன்மை இளிவன்று சால்பென்னும் ஒருவற்கு

A. 1 சரி B. 2 சரி C. 3 சரி D. 4 சரி

17. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளை அறிக.

| | தால் | தாழ் | தாள் |
|---|---|---|---|
| 1. | முயற்சி | தாழ்ப்பாள் | நாக்கு |
| 2. | தாழ்ந்த | நாக்கு | முயற்சி |
| 3. | நாக்கு | தாழ்ப்பாள் | முயற்சி |
| 4. | தாளம் | தாழ்ந்த | கால் |

A. 1 சரி B. 2 சரி C. 3 சரி D. 4 சரி

18. தவறானவற்றை எழுதுக.

A. குதிரை கத்தும் B. கழுதை கத்தும்
C. வண்டு முரலும் D. அணில் கீச்சிடும்

19. கீழ்க்கண்டவற்றுள் தவறானவை எவை?

A. சா – தேயிலைச் செடி B. சி – வெறுப்புச் சொல்
C. சீ - திருமகள் D. சு – மங்கலம்

20. கீழ்க்கண்ட செய்யுள் குறிப்பிடும் அணி எது?

“பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்”

A. ஏகதேச உருவக அணி B. இல்பொருள் உவமை அணி
C. பிறிதுமொழிதல் அணி D. வேற்றுமை அணி

APPOLO STUDY CENTRE

21. எதிர்ச்சொல் தருக "ஈண்டு"
A. இங்கு B. எங்கு C. அங்கு D. தங்கு

22. செய்யுளின் இறுதியிலிருந்து சொற்களை எடுத்து முதலில் வைத்துக் கூட்டிப் பொருள் கொள்வது
A. கொண்டுகூட்டு பொருள்கோள் B. விற்பூட்டுப் பொருள்கோள்
C. தாப்பிசை பொருள்கோள் D. அளைமறியாப்பு பொருள்கோள்

23. பிறமொழிச் சொற்கள் அற்ற தொடரைத் தேர்வு செய்க.
1. அவசர அனுமதி ஆபத்தின் ஆரம்பம் 2. விரைவு அனுமதி ஆபத்தின் தொடக்கம்
3. அவசர இசைவு இடரின் ஆரம்பம் 4. விரைவு இசைவு இடரின் தொடக்கம்
A. 1 சரி B. 2 சரி C. 3 சரி D. 4 சரி

24. பொருந்தா சொல்லை தேர்ந்தெடு.
A. ஐயம் B. புவி C. பூமி D. உலகம்

25. "பல்லி" என்ற சொல்லின் அசை யாது?
A. நேரசை (ம) நேரசை B. நிரையசை
C. நேரசை (ம) நிரையசை D. இரண்டும் இல்லை

26. தவறான பகுபத உறுப்பிலக்கண பிரித்தறிதலை காண்.
1. வாழ்க = வாழ் + க 2. கூறி = கூறு + இ
3. ஊரன் = ஊர் + அன் 4. தொடேன் = தொடு + ஏன்
A. 1 B. 2 C. 3 D. 4

27. ஒருமை, பன்மை பிழையை நீக்குக.
A. மழை பொழிந்தது B. மழை பெய்ந்தது
C. மழை பொழிந்தன D. மழை பெய்ந்தன

28. வெண்பாவின் பொது இலக்கணம் பெற்று ஐந்து அடி முதல் பன்னிரெண்டு அடி வரை பெற்று வரும் "பா" எது?
A. இன்னிசை வெண்பா B. நேரிசை வெண்பா
C. நேரிசை சந்தியல் வெண்பா D. பஃறொடை வெண்பா

29. கீழ்க்கண்டவற்றுள் எது செய்வினை வாக்கியம் அல்ல?
A. பாண்டியன் கதவை தட்டினான்
B. இளங்கோ பாடம் படித்தான்
C. மக்கள் நாடகத்தை பார்த்தனர்
D. சேக்கிழார் சோழனால் வரவேற்கப்பட்டார்

30. ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்க லாற்றின்
_____________ ஏமாப் புடைத்து
கோடிட்ட இடத்தில் வரும் வார்த்தை எது?
A. எளிமையும் B. ஏழ்மையும் C. எழுமையும் D. இறக்கமும்

31. திருவள்ளுவரை பற்றிய கருத்தில் சரியானது எது?
1. கி.பி. இரண்டாம் நூற்றாண்டை சேர்ந்தவர் என்பர் சிலர்
2. திருவள்ளுவரை பற்றிய உண்மை வரலாறு புலப்படவில்லை
3. செவிவழி செய்திகளே உள்ளன
4. கி.மு. 31-ல் தோன்றியவர் என்பர் அறிஞர் சிலர்
A. 1, 2, 3, 4 சரி B. 4 மட்டும் சரி
C. 2, 4 சரி D. 3, 4 சரி

32. பொய்ப்பால பொய்யேயாய்ப் போயினபொய் யல்லாத என திருக்குறள் பெருமையை பாடியவர்
A. கபிலர் B. பரணர் C. மாங்குடி மருதனார் D. தேனிக்குடி கீரனார்

33. மறப்பினு மோத்துக் கொளலாரும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும் - என்னும் குறள் கூறும் பொருள்
A. காலம் B. வலி C. ஒழுக்கம் D. கேள்வி

34. மாறியுள்ள சீர்களை முறைப்படுத்துக.
இறப்பினை என்றும் பொருத்தல் அதனினும் நன்று மறத்தல் அதனை
1. பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை
மறத்தல் அதனினும் நன்று
2. இறப்பினை அதனினும் என்றும் பொறுத்தல்
மறத்தல் அதனினும் நன்று
3. இறப்பினை பொறுத்தல் என்றும் அதனை
மறத்தல் அதனினும் நன்று
4. பொறுத்தல் இறப்பினை அதனை என்றும்
மறத்தல் அதனினும் நன்று
A. 1 B. 2 C. 3 D. 4

35. "பசைபடி பச்சை நெய்தோய்ந் தன்ன" என அடிகள் வரும் பாடல் நூல் எது?
A. அகநானூறு B. புறநானூறு C. கலித்தொகை D. பதிற்று பத்து

36. ஐங்குநுறூறு பாடலில் சரியானவை எது?
1. அகவற்பாக்களால் ஆனது
2. தொகுத்தவர் - யானைக் கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை
3. மூன்றடி – 6 அடி
4. பாலைத் தினை பாடியவர் - அம்மூவனார்
A. 1, 2, 3 சரி B. 1, 3 சரி C. 1, 4, 2 சரி D. 1, 2, 3, 4 சரி

37. கபிலர் பற்றி சரியானவை எவை?

1. கலித்தொகையில் குறிஞ்சியில் 29 பாக்கள் பாடினார்
2. "கம்பரது பாட்டு" என்னும் தொடரே பாட்டு வல்லமைக்குச் சான்று
3. பதிற்று பத்தில் ஐந்தாம் பத்து பாடினார்
4. "புலனழுக் கற்ற அந்தணாளன்" என புகழப்பட்டார்

A. 1, 2, 3 சரி B. 1, 2, 3, 4 சரி C. 1, 2 சரி D. 1, 4 சரி

38. பரிபாடலின் சிறுமை, பெருமை அடிகள்

A. 10 - 20 B. 3 - 6 C. 9 - 12 D. 25 - 400

39. அறுபடை வீடுகள் இல்லாதது எது?

1. திருச்சீரலைவாய் 2. திருஆவினன்குடி 3. திருவேரகம் 4. திருக்கோவிலூர்

A. 1 B. 2 C. 3 D. 4

40. பௌத்த பள்ளி, அந்தனர் பள்ளி, அமணி பள்ளி பற்றிக் கூறும் நூல் எது?

A. மதுரைக் காஞ்சி B. நெடுநல்வாடை
C. பட்டினப்பாலை D. குறிஞ்சிப்பாட்டு

41. இனியவை நாற்பது பற்றி சரியானது எது?

1. கடவுள் வாழ்த்து, சிவன், திருமால், பிரம்மன்
2. 124 இனிய செயல்கள்
3. 40 பாடல் கொண்டது
4. ஆசிரியர் - பூதஞ்சேந்தனார்

A. 1, 3, 4 மட்டும் சரி B. 1, 2, 3, 4 மட்டும் சரி
C. 3, 4 மட்டும் சரி D. 1, 3, 2 மட்டும் சரி

42. திரிகடுகம் பற்றி தவறான கருத்து எது?

1. கடுகம் என்றால் காரம் என்பர் 2. பாடியவர் நல்லாதனார்
3. 100 பாடல் 4. சுக்கு, மிளகு, பெருமல்லி கொண்டது

A. 3 B. 4 C. 1 D. 1, 4

43. கீழ்க்கண்டவற்றுள் பொருந்தாதது எது?

A. திரிகடுகம் B. சிறுபஞ்சமூலம் C. ஏலாதி D. ஆசார கோவை

44. குறள் வெண்பா, சிந்தியல் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா என கலந்த நூல் எது?

A. ஆசாரக் கோவை B. சிறுபஞ்சமூலம்
C. திருக்குறள் D. திரிகடுகம்

45. ராமாயணம் போர் எத்தனை காலம் நடந்தது?

A. 18 வருடம் B. 18 மாதம் C. 18 நாள் D. 12 வருடம்

 PH: 24339436, 42867555, 9840226187

APOLLO STUDY CENTRE

46. இளங்கோவடிகள் பற்றி சரியான கூற்று எது?
1. அப்பா – சேரன், அம்மா – சோழ வம்சம்
2. சிலப்பதிகாரம் இயற்ற சீத்தலை சாத்தனார் உதவினார்
3. நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள் என இளங்கோவடிகள் சொன்னார்
4. இளங்கோவடிகள் காசியில் ஆசிரமம் ஒன்று அமைத்தார்
A. 1, 2, 3 சரி B. 1, 2, 3, 4 சரி C. 2, 3 சரி D. 2, 3, 4 சரி

47. கீழ்க்கண்டவற்றுள் சரியானது எது?
1. கவுந்தியடிகள் - பௌத்த துறவி
2. அறவண அடிகள் - சமணத்துறவி
3. கண்ணகிக்கு கோவில் கட்டியவர் - இளங்கோவடிகள்
4. கண்ணகிக்கு கோவில் உள்ள ஊர் - திருவஞ்சிகளம்
A. 1, 2 மட்டும் சரி B. 1, 2, 3 மட்டும் சரி
C. 1, 2, 3, 4 சரி D. 4 மட்டும் சரி

48. அனைத்து சமயத்தவரும் விரும்பி கற்ற காப்பியம்
A. சைவ காப்பியம் B. சமண காப்பியம்
C. புத்த காப்பியம் D. வைணவ காப்பியம்

49. யசோதர காவியம் பற்றி சரியான கூற்று எது?
1. ஆசிரியர் - வெண்ணாவலூர் உடையார்
2. 5 சருக்கம்
3. உயிர்கொலை தீது என்று உணர்த்தும் நூல்
4. 7 வகை நரகங்கள் கூறப்படுகின்றன
A. 1, 2, 3 மட்டும் சரி B. 1, 3, 4 மட்டும் சரி
C. 2, 3 மட்டும் சரி D. 1, 2, 3, 4 சரி

50. சூளாமணி பற்றி சரியான கூற்று எது?
1. ஆசிரியர் தோலா மொழித் தேவர் 2. ஆசிரியர் வர்த்தமான தேவர்
3. போருக்கு காரணம் பொறாமை என்கிறது 4. கதாநாயகர் - ஆதிரன்
A. 2, 3, 4 சரி B. 3, 4 சரி C. 1, 4 சரி D. 1, 2, 3 சரி

51. பாரதியார் பற்றி சரியான கூற்று எது?
1. தேசியக்கவி 2. மகாகவி 3. புரட்சிக் கவி 4. இலக்கிய விடிவெள்ளி
A. 1, 2, 4 சரி B. 1, 2, 3, 4 சரி C. 1, 2 சரி D. 1, 3, 4 சரி

52. “வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால்
மையத்து நாடுகளில் பயிர் செய்குவோம்” என்று பாடியவர்
A. பாரதி B. பாரதிதாசன் C. தேவநேய பாவாணர் D. திரு.வி.க.

53. கவிமணி நூல் அல்லாதவை எது?

1. காந்தளூர் சாகரம்
2. தேவியின் கீர்த்தனை
3. மலரும் மாலையும்
4. உமர்கய்யாம் பாடல்

A. 1 B. 1, 2 C. 2 D. 4

54. பாரதிதாசன் நூலில் தவறானது எது?

1. குறிஞ்சி திட்டு
2. இளைஞர் இயக்கம்
3. இளைஞர் இலக்கியம்
4. மணிமேகலை வெண்பா

A. 1 B. 2 C. 3 D. 4

55. பொருத்துக.

a. அழகின் சிரிப்பு — 1. கற்ற பெண்களின் சிறப்பு
b. குடும்ப விளக்கு — 2. இயற்கையை வருணிப்பது
c. இருண்ட வீடு — 3. பொதுவுடைமை
d. சஞ்சீவி பர்வதத்தின் சாரல் — 4. கல்லாத பெண்களின் இழிவு

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A | 3 | 1 | 2 | 4 |
| B | 2 | 1 | 4 | 3 |
| C | 3 | 1 | 4 | 2 |
| D | 1 | 2 | 3 | 4 |

56. பொருந்தாததை எழுதுக.

1. குறிஞ்சி - கிழங்கு அகழ்தல்
2. முல்லை - காட்டுக் கோழி
3. மருதம் - செங்கழுநீர்
4. நெய்தல் - குறும்பு

A. 1 B. 2 C. 3 D. 4

57. வீரமாமுனிவர் பற்றி சரியானவற்றை எழுது.

1. தேம்பாவணி - 3 காண்டம்
2. வேதியியல் ஒழுக்கம்
3. தமிழ் அகராதியின் தந்தை
4. முதல் அகராதி - சதுரங்க அகராதி

A. 1, 3 சரி B. 1, 2, 3 சரி C. 1, 2, 3, 4 சரி D. 1, 3, 4 சரி

58. பொருத்தமற்றதை தேர்வு செய்.

1. ஒன்றே குலம் ஒருவனே தேவன்
2. யாதும் ஊரே யாவரும் கேளிர்
3. நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்
4. உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேன்

A. 1 B. 2 C. 3 D. 4

59. H.A. கிருஷ்ண பிள்ளை எழுதாத நூல் கீழ்க்கண்டவற்றுள் எது?

A. இரட்சண்ய யாத்திரிகம் B. இரட்சண்ய மந்திரிகம்
C. இரட்சண்ய குறள் D. இரட்சண்ய மனோகரம்


PH: 24339436, 42867555, 9840226187
APOLLO STUDY CENTRE

60. ‘‘விவேக சிந்தாமணி’’ பற்றி சரியான கூற்று எது?
1. இது புலவர் பலரால் இயற்றப்பட்ட பாக்களின் தொகுப்பு
2. இதை தொகுத்தவர் யாரென தெரியவில்லை
3. போர்முறை பற்றி விளக்கும் நூல்
4. இதன் பாட்டுடை தலைவன் - சிந்தாமணி
A. 1, 2 சரி B. 1, 3, 4 சரி C. 1, 2, 3 சரி D. 1, 4 சரி

61. பிள்ளைத்தமிழ் பற்றி சரியான கூற்றை எழுது.
1. ‘‘99’’ சிற்றிலிக்கியங்களில் ஒன்று
2. ‘‘இறைவனை பாட்டுடைத் தலைவனாக பாடும் பாடல்’’
3. ஆண்பால் பருவம்- சிற்றில், சிறுபறை, சிறுதேர்
4. பெண்பால் பருவம் - அம்மானை, நீராடல், ஊசல்
A. 1, 2, 3 சரி B. 1, 2, 4 சரி C. 1, 2, 3, 4 சரி D. 2, 3, 4 சரி

62. கலிங்கத்துப்பரணி பற்றி சரியான கூற்று எது?
1. கலிங்க மன்னன் அனந்தபன்மன் மீது போர்
2. முதல் குலோத்துங்கள் வெற்றி
3. வெற்றி பெற்ற கலிங்க நாட்டின் பெயரால் இது அமைந்தது
4. 599 – தாழிசையால் ஆன
A. 1, 3, 4 சரி B. 2, 3, 4 சரி C. 1, 2, 4 சரி D. 1, 2, 3, 4 சரி

63. நந்தி கலம்பகம் பற்றி சரியான கூற்று எது?
1. மூன்றாம் நந்திவர்மன் பற்றியது
2. முதலாம் நந்திவர்மன் பற்றியது
3. நந்திவர்மனின் அகவாழ்க்கை பற்றி குறிப்பிடும் நூல்
4. நந்திவர்மனின் வீரச்செயலைப் பற்றி குறிப்பிடும் நூல்
A. 1, 3 சரி B. 2, 3 சரி C. 1, 4 சரி D. 2, 4 சரி

64. சொக்கநாத பிள்ளை பற்றி சரியான கூற்று எது?
1. பல பட்டடை கணக்கு பணி செய்து வந்தனர்
2. பல பட்டடை கோவில் பணி செய்து வந்தனர்
3. தமிழ்த் தென்றல் என்னும் நூல் எழுதினார்
4. அழகர் கிள்ளை விடு தூது என்னும் நூல் எழுதினார்
A. 2, 4 சரி B. 1, 4 சரி C. 1, 3, 4 சரி D. 4 சரி

65. ‘‘கானருகும் வயலருகும் கழியருகும் கடலருகும்’’ எனத் தொடங்கும் பாடல் இடம் பெற்ற நூல் எது?
A. குற்றால குறவஞ்சி B. தேவாரம்
C. பெத்லகேம் குறவஞ்சி D. முக்கூடற்பள்ளு

66. பொருத்தமற்றதை தேர்வு செய்க.
1. மங்கை - 13 – 14
2. அரிவை - 20 - 25
3. பெதும்பை - 8 – 11
4. பேரிளம் பெண் - 33 - 40
A. 1 B. 2 C. 3 D. 4

APOLLO STUDY CENTRE

67. "அஷ்டபிரபந்தம் கற்றவன் அரை பண்டிதன்" என்னும் பழமொழி எந்த நூலின் உயர்வை புலப்படுத்தும்

A. இராசராச சோழனுலா
B. அழகர் கிள்ளை விடு தூது
C. திருவேங்கடத்தந்தாதி
D. குற்றால குறவஞ்சி

68. முக்கூடற் பள்ளுவை பற்றி கீழ்க்கண்டவற்றுள் எது தவறு?

A. நாட்டுவளன் அறிதல்
B. குறிகேட்டல்
C. மழை வேண்டி வழிபடல்
D. மலைகளின் இருப்பிடம் அறிதல்

69. பிள்ளைத் தமிழ் என்பது எந்த மாதம் முதல் எந்த மாதம் வரை பாடப்படும்?

A. 3 - 21
B. 2 - 20
C. 1 - 19
D. 1 – 13

70. பொருத்துக.

a. டி.எம். சிதம்பரம் ரகுநாதன் — 1. பாரதி, காலமும் கருத்தும்
b. கா. நா. சுப்பிரமணியம் — 2. இலக்கியத்துக்கு ஒரு இலக்கியம்
c. கோவை மணிசேகரன் — 3. குற்றால குறவஞ்சி
d. சி.எஸ். செல்லப்பா — 4. சுதந்திர தாகம்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A | 1 | 3 | 2 | 4 |
| B | 1 | 2 | 3 | 4 |
| C | 2 | 3 | 4 | 1 |
| D | 4 | 1 | 2 | 3 |

71. சி.சு. செல்லப்பா அவர்களின் படைப்பில் அல்லாதது எது?

1. மாற்று இதயம்
2. சத்தியாகிரகி
3. முறைப்பெண்
4. நினைவோடைகள்

A. 1 சரி
B. 2 சரி
C. 3 சரி
D. 4 சரி

72. ரா. மீனாட்சி படைப்புகள் அல்லாதது எது?

1. கிடாரி
2. நெருஞ்சி
3. மறுபயணம்
4. வாசனைப் புயல்

A. 2
B. 1
C. 1, 2
D. 3

73. கண்ணதாசன் படைப்புகள் அல்லாதது எது?

1. வனவாசம்
2. கவிதாஞ்சலி
3. பாடும் குயில்
4. தைப்பாவை

A. 2, 3
B. 1, 2
C. 3, 4
D. 3

74. பொருத்துக.

a. பெற்ற மனம் — 1. அண்ணா
b. வேலைக்காரி — 2. வ.வே.சு. ஐயர்
c. குளத்தங்கரை அரசமரம் — 3. கல்கி
d. தியாகபூமி — 4. மு.வ.

APPOLO STUDY CENTRE

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A | 4 | 1 | 2 | 3 |
| B | 1 | 4 | 2 | 3 |
| C | 2 | 3 | 1 | 4 |
| D | 4 | 2 | 3 | 1 |

75. பொருத்துக.

a. நவீன கம்பர் — 1. பாரதியார்
b. உணர்ச்சி கவி — 2. பெரியசாமி
c. தூரன் — 3. மீனாட்சி சுந்தரம் பிள்ளை
d. காங்கிரஸ் புலவன் — 4. ராமலிங்கம் பிள்ளை

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A | 3 | 4 | 2 | 1 |
| B | 3 | 4 | 1 | 2 |
| C | 3 | 1 | 2 | 4 |
| D | 1 | 2 | 3 | 4 |

76. சாலை இளந்திரையன் கவிதை அல்லாதவை எவை?

1. பூத்தது மாடம் 2. காவல் துப்பாக்கி 3. எந்திர கலப்பை 4. காக்கைவிடு தூது

A. 1 B. 2 C. 3 D. 4

77. பொருத்துக.

a. சாண்டில்யன் — 1. கனல் தாகம்
b. பாலகுமாரன் — 2. கருணைக் கொலை
c. சிவசங்கரி — 3. இந்திரகுமாரி
D. லக்ஷ்மி — 4. மிதில விலாஸ்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A | 4 | 1 | 3 | 2 |
| B | 1 | 2 | 3 | 4 |
| C | 3 | 2 | 1 | 4 |
| D | 3 | 1 | 2 | 4 |

78. பொருத்துக.

a. மானவிஜயம் — 1. பரிதிமாற் கலைஞர்
b. சத்தி முத்துப் புலவர் — 2. பாரதிதாசன்
c. மனோன்மணீயம் — 3. பெ. சுந்தரம் பிள்ளை
d. தண்ணீர் தண்ணீர் — 4. கோமல் சுவாமிநாதன்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A | 1 | 4 | 3 | 2 |
| B | 1 | 2 | 3 | 4 |
| C | 4 | 2 | 3 | 1 |
| D | 3 | 4 | 1 | 2 |

79. தமிழ்நாட்டின் “தாக்கரே” யார்?
A. மாதவையா B. கல்கி C. வெங்கடரமணி D. பாரதி

80. மேல்சாதி – கீழ்சாதி வேற்றுமை அகல எல்லோருக்கும் கல்வி அவசியம் என்று கூறியவர்
A. அம்பேத்கார் B. பெரியார்
C. வள்ளலார் D. விவேகானந்தர்

81. உ.வே.சா.வின் மாணவர்கள் யார்?
1. குலாம் காதர் நாவலர் 2. சவரி ராயலு
3. தியாகராசர் 4. வெங்கட சுப்பு
A. 1, 2 தவறு B. 2, 3, 4 தவறு
C. 4 தவறு D. அனைத்தும் தவறு

82. தறி நெய்யப் பயன்படும் கருவிகள் எது?
1. அச்சு மரம் 2. விழுது மரம் 3. குத்துக்கம்பி 4. பாவு
A. 1, 2, 3, 4 சரி B. 1, 3 மட்டும் சரி
C. 1, 3, 4 சரி D. 2, 3 சரி

83. தமிழர்களின் கலைத்திறனை உலகுக்கு எடுத்துக்காட்டும் கலை எது?
A. நாடகம் B. நடனம் C. ஓவியம் D. இலக்கியம்

84. அனல் பறக்கும் பேச்சால் இயக்கத்தின் வளர்ச்சிக்கு உதவியவர்
A. அஞ்சலை அம்பாள் B. அம்புஜத்தம்மாள்
C. தர்மாம்பாள் D. மூவலூர் ராமாமிர்தம்

85. கீழ்க்கண்டவற்றுள் சரியானவற்றை எழுதுக.
1. கூத்துகளில் கோமாளிகள் - நகைச்சுவை
2. அரசவைகளில் விகடகவிகள் - நகைச்சுவை
3. நகைச்சுவை காரணம் - எள்ளல், இளமை, அறியாமை, மடமை
4. மிருதங்கம் ஓசை எரு தட்டும் ஓசை எனக் கூறியவர் - அழகிய சொக்கநாதர்
A. 1, 2 மட்டும் சரி B. 1, 2, 3 மட்டும் சரி
C. 1, 2, 3, 4 சரி D. 2, 3, 4 மட்டும் சரி

86. யானையைக் கொல்லாமலே யானை காலிலிருந்து முதியவரை காப்பாற்றியவன் யார்?
A. கோவலன் B. ராமன் C. நவகோடிநாராயண் D. அனுமன்

87. இழப்பிலும் கடமை உணர்வுடன் வாழ்ந்தவர் யார்?
A. உ.வே.சா. B. திரு.வி.க.
C. பம்மல் சம்பந்தனார் D. பரிதிமாற் கலைஞர்


APPOLO STUDY CENTRE

88. நீ தேட வேண்டுவது தொண்டு, தலைமை தாங்குவதும் ஒரு தொண்டுதான் எனக் கூறியவர்

A. விவேகானந்தர் B. திரு.வி.க.

C. தேவநேய பாவாணர் D. மு. வரதராசனார்

89. சுரதா பற்றி சரியானவற்றைத் தேர்ந்தெடு.

1. சுப்புரத்தினதாசன் - சுரதா எனவும் அழைப்பர்
2. இராசகோபாலன் - இரா.கோ. என்பர்
3. உவமைக் கவிஞர் என்பர்
4. சங்கீத நாடக அகாடமியின் கலைமாமணி பட்டத்தையும் பெற்றார்

A. 1, 2, 3 சரி B. 1, 3 சரி C. 1, 2, 3, 4 சரி D. 1, 3, 4 சரி

90. பாஸ்கரதாஸ் மனத்தை குரங்கென கூறுவதேன்?

1. மனம் வஞ்சக குணமுடையது
2. அடுத்தவரிடம் பிடுங்கி சாப்பிடும் தன்மை கொண்டது
3. மரத்திற்கு மரம் தாவுவது போல மனம்
4. மாய வாழ்வை நம்பி வாழ்தல்

A. 1 B. 2 C. 3 D. 4

91. பொருந்தாதவற்றை எழுதுக.

1. திருச்சிற்றம்பலம் - சிதம்பரம் 2. வான்நெடுங்கன்னி - கட்கநேத்ரி
3. பழமலைநாதர் - விருத்தநீர்ச்சுரர் 4. தேன்மொழிப்பாவை - விசாலாட்சி

A. 1 B. 2 C. 3 D. 4

92. பரிதிமாற்கலைஞரின் சொல்லாக்கம் அற்றவை கீழ்க்கண்டவற்றுள் எது?

1. Green Room - பாசறை 2. Instinct - இயற்கை அறிவு
3. Snacks - சிற்றுணவு 4. Green Tree - பசுமை மரம்

A. 1 B. 2 C. 3 D. 4

93. தகவல் அறியும் சட்டப்படி தகவல் பெறும் பிரிவு

A. பிரிவு 5, 2005 B. பிரிவு 6, 2005

C. பிரிவு 7, 2005 D. பிரிவு 8, 2005

94. தமிழர்களின் வீர விளையாட்டான ஏறுதழுவுதல் பற்றி கூறுவது

A. ஹரப்பா B. மொகஞ்சதாரோ C. பள்ளிச்சந்தை D. லோத்தல்

95. இரட்சணிய யாத்திரிகம் பற்றிய சரியான கூற்று எது?

1. இயேசு, யுதேய மரபுகளை மீறினார் என மன்னன் மரண தண்டனை விதித்தான்
2. ஜான்பன்யன் நூலாசிரியரின் நூலின் மொழிபெயர்ப்பு
3. பில்கிரிம்ஸ் புரோகிரஸ் என்ற நூலின் மொழிபெயர்ப்பு
4. இது ஒரு வழிநூல்

A. 1, 2, 3, 4 சரி B. 1, 2, 3 மட்டும் சரி

C. 2, 3 மட்டும் சரி D. 3, 4 மட்டும் சரி

96. கீழ்க்கண்டவற்றுள் தவறானது எது?

1. சின்ன சீறா - பனூ அடுமது மரைக்காயர்
2.“எட்டையபுரம் கடிகை முத்துப்புலவர்” - உமறுப் புலவரின் மாணவர்
3. முகுந்த மாலை என்ற நூலை உமறுப்புலவர் இயற்றினார்
4. காலம் 17-ம் நூற்றாண்டு

A. 1, 2 B. 2, 3 C. 3, 4 D. 4, 1

97. கீழ்க்கண்டவற்றுள் யார் 18 சித்தர்கள் இல்லை?

A. திருமூலர் B. ராமலிங்க அடிகளார்
C. பட்டினத்தார் D. சிவபாதசாரியார்

98. 1234-ன் தமிழ் எண்ணுருக்களை காண்.

A. கஉஎஅ B. கஉஅஎ C. கஉஙச D. கஉசங

99. “இயற்கை பரிமாணம்” ______________.

A. சங்க இலக்கியம் B. திருமந்திரம் C. சிறுபஞ்சமூலம் D. ஏலாதி

100. “தமிழன்பன்” ______________.

A. ஜெகதீசன் B. அன்பழகன் C. இராமநாதன் D. கல்கி

APOLLO STUDY CENTRE

# மாதிரித்தேர்வு 2 – பொதுத்தமிழ்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| **B** | **A** | **C** | **C** | **C** | **D** | **B** | **A** | **A** | **B** |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| **C** | **A** | **A** | **A** | **A** | **A** | **C** | **A** | **B** | **C** |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| **C** | **D** | **D** | **A** | **A** | **D** | **A** | **D** | **D** | **C** |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 | 37 | 38 | 39 | 40 |
| **A** | **D** | **C** | **A** | **A** | **B** | **D** | **D** | **D** | **A** |
| 41 | 42 | 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 | 50 |
| **B** | **B** | **D** | **A** | **B** | **A** | **D** | **B** | **D** | **D** |
| 51 | 52 | 53 | 54 | 55 | 56 | 57 | 58 | 59 | 60 |
| **A** | **A** | **A** | **B** | **B** | **D** | **A** | **B** | **B** | **A** |
| 61 | 62 | 63 | 64 | 65 | 66 | 67 | 68 | 69 | 70 |
| **D** | **C** | **C** | **B** | **B** | **A** | **C** | **D** | **A** | **B** |
| 71 | 72 | 73 | 74 | 75 | 76 | 77 | 78 | 79 | 80 |
| **D** | **B** | **D** | **A** | **C** | **C** | **D** | **B** | **A** | **B** |
| 81 | 82 | 83 | 84 | 85 | 86 | 87 | 88 | 89 | 90 |
| **D** | **C** | **C** | **A** | **C** | **A** | **C** | **D** | **B** | **C** |
| 91 | 92 | 93 | 94 | 95 | 96 | 97 | 98 | 99 | 100 |
| **D** | **D** | **B** | **B** | **A** | **B** | **D** | **C** | **A** | **A** |

APPOLO STUDY CENTRE